இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

*[1990 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது***

---

*1990, நவெம்பர் மாதம் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறை நிரப்பியாக வெளியிடப்பட்டது*

***இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.***

---

***கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.***

**விலை: ரூபா 1.35** **தபாற் செலவு: ரூபா 1.50**

# 1990 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

[1990, நவெம்பர் மாதம் 20 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப் பட்டது]

ச. வ—ஓ 22/90

## 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டம், 1990 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப் படலாம்.

1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:—

"(ஆ) உற்பத்தித் தீர்வைப் பணிப்பாளர் ஒருவர், அத்துடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உற்பத்தித் தீர்வை அலுவலர்களாக இருக்கவேண்டிய பிரதிப் பணிப்பாளர்கள், உதவிப் பணிப்பாளர்கள், கண்காணிப்பாளர்கள், பிரதம பரிசோதகர்கள், பரிசோதகர்கள் அத்துடன் உப-பரிசோதகர்கள் ; அத்துடன்

(இ) மேற்கூறப்பட்ட அலுவலர்களுக்கு உதவி செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான நிருவாக, கணக்கிடுகின்ற, தொழினுட்ப அலுவலர்கள் அத்துடன் எழுதுவினைஞர்கள் அத்துடன் சிற்றூழிய பணியாட்டொகுதியினர் ;";

முதன்மைச் சட்டவாக்கத்தில் 3அ, 3ஆ எனும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

3. பின்வரும் புதிய பிரிவுகள் முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 3அ, 3ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"இலங்கையில் இருக்கின்ற ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்தின் எவரேனும் பிரதிநிதி முதலியோரை உற்பத்தித் தீர்வைக் கொடுப்பனவிலிருந்து விலக்களித்தல்.

3அ (1) அமைச்சர் காலத்துக்குக் காலம் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் (எத்தன்மைத்தான பெயர்கொண்டு, தலைப்பெயர்கொண்டு அல்லது பதவிப் பெயர்கொண்டு அழைக்கப்பட்டாலும்) ஏதேனும் வெளிநாட்டின் அரசாங்கத்தின் பிரதிநிதிகளை அல்லது அத்தகைய ஏதேனும் அரசாங்கத்தின் இலங்கையிலுள்ள வியாபார ஆணையாளரை, அத்துடன்; அத்தகைய எவரேனும் பிரதிநிதியின் அல்லது ஆணையாளரின் பணியாட்டொகுதியிலுள்ள ஆட்களை அல்லது ஐக்கிய நாடுகள் சபையின், அதனோடு இணைந்த ஒழுங்கமைப்புகளின், நிறுவனங்களின் அல்லது குழுக்களின் பிரதிநிதி

களை அல்லது அத்தகைய கட்டளையில் குறிக்கப்பட்டுள்ள சர்வதேச ஒழுங்கமைப்புகளின், நிறுவனங்களின் அல்லது குழுக்களின் பிரதிநிதிகளை, அத்தகைய வெளிநாட்டு அரசுகளின் பிரதிநிதியினால், ஆணையாளரினால் அல்லது ஆட்களினால் முறிசெய்யப்பட்ட அல்லது அவர்களின் பயன்பாட்டுக்கென அனுப்பப்பட்ட அல்லது இறக்குமதிசெய்யப்பட்ட அல்லது சுங்கத்திலிருந்து வெளியே எடுக்கப்பட்ட உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலனவான பொருட்களின் மீதான உற்பத்தித் தீர்வைக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கலாம்.

(2) அமைச்சர், தமது தற்றுணிபின் பேரில் அத்தகைய கட்டளைமூலம்—

(அ) எந்நிபந்தனைகளுக்கமைய, (எவையும் இருந்தால்) விலக்களிப்பு அனுமதிக்கப்படுகிறதோ அந்நிபந்தனைகளை விதித்துரைக்கலாம்;

(ஆ) வெளிநாட்டு அரசுகளின் அத்தகைய பிரதிநிதிகளின் ஆணையாளர்களின் அல்லது ஆட்களின் குடும்பங்களுக்கும், பரிவாரங்களுக்கும் பயன்பாட்டுக்கென அனுப்பப்பட்ட அல்லது அவர்களினால் இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலனவான பொருட்களுக்கு அத்தகைய விலக்களிப்பை வழங்கலாம்;

(இ) விலக்களிப்பை குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நாட்டைச் சேர்ந்த, தரத்தைச் சேர்ந்த அல்லது வகுப்பைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கு, ஆணையாளர்களுக்கு அல்லது ஆட்களுக்கு அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட விவரணத்தைக் கொண்ட உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலனவான பொருட்களுக்கு மட்டுப்படுத்தலாம்.

(3) அமைச்சர், தமது தற்றுணிபின்பேரில் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் விலக்களிப்பு எதனையும் மீளப்பெறலாம் அல்லது திரிபுபடுத்தலாம் அல்லது எந்நிபந்தனைகளுக்கமைய விலக்களிப்பு அனுமதிக்கப்படுகிறதோ அந்நிபந்தனைகளை மாற்றலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அது வெளியிடப்படும் தேதியன்று அல்லது அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டுமென்பதுடன் வர்த்தமானியில் அது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதியினுள் பாராளுமன்றத்

துக்குமுன் கொணரப்படுதலும் வேண்டும், அல்லது, அத்தகைய காலப்பகுதியிலுள்ள பாராளுமன்றக் கூட்டம் எதுவும் நடாத்தப்படாவிட்டால், அத்தகைய கட்டளையானது அங்கீகரிக்கப்படவேண்டுமென்ற பிரேரணை ஒன்றன் மூலம் அத்தகைய காலப்பகுதி முடிவடைந்தபின்னர் நடாத்தப்படும் பாராளுமன்றத்தின் முதற் கூட்டத்தில் கொணரப்படுதல் வேண்டும்.

(5) பாராளுமன்றம் அங்கீகாரமளிக்க மறுக்கின்ற கட்டளை எதுவும், அதன்கீழ் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடியாந்தன்மைக்குப் பங்கமின்றி அத்தகைய மறுப்புத் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படல் வேண்டும், அத்துடன், அத்தகைய கட்டளை எத்தேதியன்று ஒழிக்கப்பட்டதெனக் கருதப்படுகின்றதோ, அத்தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(6) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழான கட்டளையெதிலும் உள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகைய கட்டளை எவ்வுற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருளுக்கு ஏற்புடைத்தாகுமோ அவ்வுற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருள் எதுவும், பணிப்பாளர் தலைமையதிபதியின் முன் அனுமதியின்றி, விற்பனையின்போது அல்லது கையுதிர்ப்பின்போது அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான உற்பத்தித் தீர்வை பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்பட்டாலொழிய, விற்கப்படுதலோ அல்லது வேறு விதத்தில் கையுதிர்க்கப்படுதலோ ஆகாது. இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளை மீறி விற்கப்படும் அல்லது கையுதிர்க்கப்படும் உற்பத்தித்தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருள் எதுவும் பறிமுதல் செய்யப்படுவதற்கு உட்பட்டதாதல் வேண்டும்.

உற்பத்தித் தீர்வைக் கொடுப்பனவிலிருந்து குறித்த சில பொருட்களுக்கு விலக்களித்தல்.

3ஆ. பின்வரும் பொருட்கள் உற்பத்தித் தீர்வைக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும் :—

(அ) சுங்கத் தீர்வையற்ற கடையொன்றிலிருந்து சனாதிபதியின் உத்தியோகபூர்வ பாவனைக்கென இறக்குமதிசெய்யப்படும் அல்லது சுங்க மறியிலிருந்து எடுக்கப்படும் ஒவ்வொரு விவரணத்தினதுமான பொருட்கள்; அத்துடன்

(ஆ) சுங்கத் தீர்வையற்ற கடையொன்றிலிருந்து கொள்வனவு செய்யப்படும் அல்லது பெறப்படும் ஒவ்வொரு விவரணத்தினதுமான பொருட்கள்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"அகற்றுதல் பற்றிய அறிவிப்பு.

4. (1) உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலனவான பொருட்கள் எந்தத் தொழிற்சாலையில் அல்லது வேறு இடத்தில் தயாரிக்கப்படுகின்றதோ அல்லது உற்பத்தி செய்யப்படுகின்றதோ அந்தத் தொழிற்சாலையிலிருந்து அல்லது வேறு இடத்திலிருந்து அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்பட்டற்பாலன்வான பொருட்களின் ஏதேனும் அளவினை, எவையேனும் உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருட்களின் உற்பத்தியாளர், அகற்றுகின்றவிடத்து, அல்லது அகற்றச் செய்விக்கின்றவிடத்து, அவர், அத்தகைய அகற்றுதல் நடைபெற்ற தேதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையமுன்னர், அதுபற்றி பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது அந்நோக்கத்துக்கென பணிப்பாளர் தலைமையதிபதியால் பதவிப்பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உற்பத்தித் தீர்வை அலுவலர் ஒருவருக்கு அறிவித்தல் வேண்டும் :

(2) உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலனவான எவையேனும் பொருட்கள் இறக்குமதிசெய்யப்பட்ட பின்னர் அவை, எந்த இடத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனவோ அத்தகைய சுங்கக் குதத்திலிருந்து அல்லது எத்தகைய வேறு இடத்திலிருந்து பொருட்களின் அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலனவான பொருட்களின் ஏதேனும் அளவினை, எவையேனும் உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலனவான பொருட்களின் உற்பத்தியாளர் அகற்றுகின்றவிடத்து அல்லது அகற்றச் செய்விக்கின்றவிடத்து, அவர், அத்தகைய அகற்றுதல் நடைபெற்ற தேதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையமுன்னர் அதுபற்றிப் பணிப்பாளர் தலைமை அதிபதிக்கு அல்லது அந்நோக்கத்துக்கென பணிப்பாளர் தலைமை அதிபதியினால், பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உற்பத்தித் தீர்வை அலுவலர் ஒருவருக்கு அறிவித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் :—

"(அ) அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருள் இலங்கையில் தயாரிக்கப்பட்டிருக்கும் அல்லது உற்பத்தி செய்யப்பட்டிருக்கும் ஏதேனும் விடயத்தில், அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருள் எந்தத் தொழிற்சாலையில், அல்லது எந்த வேறு

இடத்தில் தயாரிக்கப்பட்டதோ அல்லது உற்பத்தி செய்யப்பட்டதோ, அந்தத் தொழிற்சாலையிலிருந்து அல்லது அந்த வேறு இடத்திலிருந்து அது அகற்றப்பட்டபின்னர், விதித்துரைக்கப்பட்ட முறையில், அந்த உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருளைத் தயாரித்தவரினால் அல்லது உற்பத்தி செய்தவரினால் செலுத்தப்படுதல் வேண்டும், அத்துடன், அத்தகைய தீர்வை, அத்தகைய அகற்றுதல் எவ்வாண்டின்போது நிகழ்கிறதோ, அவ்வாண்டின் ஒவ்வொரு காலாண்டின் கடைசித் தேதியிலிருந்து ஒரு பஞ்சாங்க மாதத்துக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருள் இலங்கைக்குள் இறக்குமதிசெய்யப்பட்ட ஏதேனும் விடயத்தில், இலங்கைக்குள், இறக்குமதிசெய்யப்பட்ட பின்னர் உடனடியாக அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருள் எந்தச் சுங்கக் குதத்தில் அல்லது எந்த வேறு இடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டதோ, அந்தச் சுங்கக் குதத்திலிருந்து அல்லது அந்த வேறு இடத்திலிருந்து அகற்றப்பட்டபின்னர், விதித்துரைக்கப்பட்ட விதத்தில், அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருளை இறக்குமதி செய்தவரினால் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன், அத்தகைய தீர்வை, அத்தகைய இறக்குமதி எவ்வாண்டில் நிகழ்ந்ததோ அவ்வாண்டின் ஒவ்வொரு காலாண்டின் கடைசித் தேதியிலிருந்து ஒரு பஞ்சாங்க மாதத்துக்குள் செலுத்தப்படல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :—

"(2) இச்சட்டத்தில் உள்ளது எது எவ்வாறிருப்பினும், (3அ, 3ஆ என்னும் பிரிவுகளின் கருத்தெல்லைக்குள் விலக்களிக்கப்பட்ட பொருளொன்றல்லாத) இலங்கைக்கு வெளியே உற்பத்திசெய்யப்பட்ட உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருள் எதனையும் இறக்குமதி செய்கின்ற ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருள் எந்தச் சுங்கத் குதத்தில் அல்லது வேறு இடத்தில் களஞ்சியப்படுத்தப்படுகிறதோ, அந்தச் சுங்கக் குதத்திலிருந்து அல்லது அந்த வேறு இடத்திலிருந்து அகற்றப்படுவதற்கு முன்னர், 3 ஆம் பிரிவின்கீழ் தீர்மானிக்கப்படும் உற்பத்தித் தீர்வை விகிதங்களில், இறக்குமதி தொடர்பில், அத்தகைய பொருளின் விலைப் பெறுமதி, காப்புறுதிப் பெறுமதி அத்துடன் கப்பற்செலவுப் பெறுமதிமீது பகுதியளவிலான உற்பத்தித் தீர்வையை சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும். அத்தகைய பொருள் எந்தச் சுங்கக் குதத்தில் அல்லது வேறு இடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டதோ, அந்தச் சுங்கக் குதத்திலிருந்து

அல்லது அந்த வேறு இடத்திலிருந்து அகற்றப்பட்ட பின்னர் அத்தகைய பொருளின்மீது வருமதியாகவுள்ள உற்பத்தித் தீர்வையில் உள்ள வித்தியாசம், 5(1) (ஆ) என்னும் பிரிவில் தரப்பட்டுள்ள முறையில் செலுத்தப் படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பொருளின் மீது செலுத்தப்படும் மொத்த உற்பத்தித் தீர்வை, 7 ஆம் பிரிவின்கீழ் கண்டறியப்படும் பெறுமதிக்கு இணங்க இருத்தலும் வேண்டும்.

(3) உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் பொருள் மீது செலுத்தப்படற்பாலதான உற்பத்தித் தீர்வை (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கிச் செலுத்தப்படாவிடின், அத்தகைய உற்பத்தித் தீர்வை தவறுகைக்குள்ளாகியுள்ளது எனக் கருதப்படல் வேண்டும்;

ஆயின், ஏற்றுமதிசெய்யும் நோக்கத்துக்காக இலங்கையில் தயாரிக்கப்பட்டிருக்கின்ற அல்லது உற்பத்தி செய்யப்பட்டிருக் கின்ற உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருள் எது வும், அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருள் சென்றடைய வேண்டிய துறைமுகத்தில் இறக்கப்படுவ தற்கான முறியொன்று செய்யப்பட்டால், உற்பத்தித் தீர்வைக் கொடுப்பனவுக்கு உட்பட்டதாதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 5அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 5அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"குறித்தசில சந்தர்ப்பத்தில் உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருளின் விற்பனை விலையை மதிப்பிடுவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குள்ள தத்துவம்.

5அ. உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருள் எதனையும் உற்பத்திசெய்கின்ற, தயாரிக்கின்ற அல்லது இறக்குமதி செய்கின்ற தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஆளெவரும், அவ்வாளினால் செலுத்தப் படற்பாலதான உற்பத்தித் தீர்வையைக் குறைக்கின்ற தென அல்லது குறைக்குமெனப் பணிப்பாளர் தலைமை யதிபதி அபிப்பிராயப்படும் விலையில் விநியோகம் செய் யும் நோக்கத்துக்காக அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருளை விற்கின்றவிடத்து, இச்சட்டத்தின் நோக்கத்துக்காக, அத்தகைய உற்பத் தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருள், அத் தகைய விற்பனைத் தேதியன்று வெளிச்சந்தையில் அது பெற்றிருக்கக்கூடியது எனப் பணிப்பாளர் தலைமை யதிபதி அபிப்பிராயப்படும் விலையில் விற்கப்பட்டிருக் கிறது எனக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அத் தகைய ஆளிடமிருந்து அறவிடப்படற்பாலதான உற் பத்தித் தீர்வை அதற்கிணங்கக் கணிக்கப்படுதலும் வேண்டும்.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை நீக்குதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அதன் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட் பந்தியை நீக்குவதன் மூலமும்;

(ஆ) அதன் (அ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட் பந்தியை (ii) ஆம் உட்பந்தியென மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(இ) உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் பொருள் தொடர்பில், 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க விற்பனை வரவுவரிச் சட்டத்தின்கீழ் விற்பனை வரவுவரி விதிக்கப்படவிருக்கின்றவிடத்து, விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்தில், விற்பனை வரவுவரி தீர்மானிக்கப்படும் நோக்கங்களுக்காக அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருளின் வெளிப்படுத்தப்பட்ட பெறுமதியெனக் கருதப்படுதல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் 'ஒப்படைப்பதற்கான விலையைத் தொடர்புபடுத்தி அதன் பெறுமதி தீர்மானிக்கப்படுகின்றவிடத்தும், அகற்றும் இடத்திலிருந்தும்' என்னும் சொற்களுக்குப் பதிலாக, 'அகற்றும் இடம் அல்லாத வேறோர் இடத்தில் அதனை ஒப்படைப்பதற்கான அதன் பெறுமதி தீர்மானிக்கப்படுகின்றவிடத்தும் அகற்றும் இடத்திலிருந்தும்".

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில்—

(அ) அதன் (ஆ) எனும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "அல்லது கலக்கப்பட்டிருக்கிறதோ அந்தச் சுங்கக் குதம் அல்லது இடம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்துடன் விற்பனைக்கு முன்னர் அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலனவான பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்காக பணிப்பாளர் தலைமையதிபதியுடன் பதிவுசெய்துகொள்ளப்பட்ட வேறு ஏதேனும் இடம்," என்னும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(ஆ) அதன் (ஈ) என்னும் பந்தியில் "ஆனால் அத்தகைய உற்பத்தித்தீர்வை விதிக்கப்படற்பாலனவான பொருட்கள் மீது" என்று தொடங்கி அப்பந்தி முடியவுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "ஆனால் அத்தகைய பொதியாக்கல் பொருள்மீது செலுத்தப்படற்பாலதான உற்பத்தித் தீர்வையை, மொத்த விற்பனை வரவு வரியை அத்துடன் எவையேனும் வேறு வரிகள் இருப்பின் அவற்றை உள்ளடக்காது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 7அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

9. பின்வரும் புதிய பிரிவானது 7 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 7அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"மாதிரிகள், கணக்கீட்டுப் புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணத்தைக் கோரிப் பெறுவதற்கு பணிப்பாளர் தலைமையதிபதிக்குள்ள தத்துவம்.

7அ. பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அது தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட கண்காணிப்பாளர் பதவிவரிசைக்குக் குறையாத எவரேனும் உற்பத்தித் தீர்வை அலுவலர், உற்பத்தித் தீர்வை அறவிடுவது தொடர்பான அல்லது இச்சட்டத்தின்கீழ் எக்கருமத்தையும் செய்வதற்கு அத்தகைய உற்பத்தித் தீர்வை அலுவலரை அனுமதிக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) அமைச்சரானவர், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி மூலம், ஏதேனும் இயற்கையான காரணத்தினால் அல்லது வேறு வகையில் தரத்தில் குறைபாடுடையதாகக் காணப்படுகின்ற அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதன் சார்பில் நியமிக்கப்பட்ட கண்காணிப்பாளர் பதவி வரிசைக்குக் குறையாத ஆகக் குறைந்தது இரு அலுவலர்களைக்கொண்ட மதிப்பீட்டாளர் சபையொன்றினதும் காலத்துக்கு ஒவ்வாததென்ற காரணத்துக்காக அல்லது வேறேதேனும் நியாயமான காரணத்துக்காக காலப்பகுதியொன்றுக்கு விற்கப்படாதவையும், விற்கப்படமுடியாதவையெனத் தீர்மானிக்கப்பட்டவையுமான எவையேனும் உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலனவான பொருட்கள்மீது விதிக்கப்படற்பாலனவான உற்பத்தித் தீர்வையைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்."

11. பின்வரும் புதிய பிரிவானது 8 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 3அ எனும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:— *முதன்மைச் சட்டவாக்கத்தில் 8அ எனும் புதியபிரிவை உட்புகுத்துதல்.*

*"மதிப்பீட்டாவர் சபையினது தீர்மானத்துக்கெதிரான மேன் முறையீடுகள்.*

8அ. (1) ஆள் எவரும், 8 ஆம் பிரிவின்கீழ் மதிப்பீட்டாளர் சபையினால் செய்யப்பட்ட ஏதேனும் தீர்மானத்தையிட்டு அதிருப்திப்பட்டால், அத்தகைய தீர்மானம் பற்றி அவருக்கு அறிவிக்கப்பட்ட தேதிக்குப்பின்னர் பதினொன்று நாட்கள் முடிவடைவதன்முன்னர் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய தீர்மானத்துக்கெதிராக, எழுத்தில் முறையீடு செய்யலாம் :

ஆயின், இலங்கையில் இல்லாமை காரணமாக, சுகவீனம் காரணமாக அல்லது வேறு நியாயமான ஏதும் காரணமாக மேன்முறையீட்டாளர் அத்தகைய காலப்பகுதிக்குள் மேன்முறையீடு செய்வதிலிருந்து தடுக்கப்பட்டாரெனப் பணிப்பாளர் தலைமையதிபதி திருப்தியடைந்ததன்மேல் மேன்முறையீட்டை முன் வைப்பதற்கு கால நீடிப்பொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின்மீது, எந்தத் தீர்மானத்துக்கெதிராக அத்தகைய மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்தத் தீர்மானத்தை உறுதிப்படுத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

(3) ஈராம் உட்பிரிவின்கீழ், பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின்மேல், அவரது முடிவினால் இடருற்ற எவரேனும் ஆள், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அத்தகைய முடிவு அவருக்குத் தெரிவிக்கப்பட்ட தேதியின்பின்னர் பத்து நாட்கள் முடிவடைய முன்னர் திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம்.

(4) மூன்றும் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு முன்வைக்கப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின்மீது, திறைசேரிப் பிரதிச் செயலாளரின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.".

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில் "பத்து ஆண்டுகளுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐந்து ஆண்டுகளுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் 'அத்தகைய தீர்மானத்தின்மீது செலுத்தப்பாலதான' என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய மேன்முறையீடு தீர்மானிக்கப்படும்வரை உற்பத்தித் தீர்வை

அல்லது ஏதேனும் பாகத்தின் கொடுப்பனவு நிறுத்திவைக்கப் பட வேண்டுமென, பணிப்பாளர் தலைமையதிபதி கட்டளையிட்டாலன்றி அத்தகைய தீர்மானத்தின் மீது செலுத்தப்பாலதான''.

(2) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலம் :—

"(6) கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 31ஈ என்னும் பிரிவின் (3) ஆம், (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகள் பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிவொன்றிலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கான மேன்முறையீடுகளுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 12அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 12அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"தவணை தவறுகைக்கான தண்டம்.

12அ. (1) இச்சட்டத்திலுள்ளது எது எவ்வாறிருப்பினும் ஏதேனும் உற்பத்தித் தீர்வை தவணை தவறியதாக இருக்கின்றவிடத்து தவணை தவறியவர் தவணை தவறிய அத்தகைய தீர்வைக்கு மேலதிகமான தண்டமாக—

(அ) தவணை தவறிய தொகையின் பத்து வீதத்துக்குச் சமமான ஒரு பணத்தொகையையும்; அத்துடன்

(ஆ) தீர்வையானது எந்த மாதத்துக்கு வருமதியானதோ அந்த மாதத்தை அடுத்துவரும் மாதம் முடிவடையுமுன்னராக தவணை தவறிய ஏதேனும் தொகை செலுத்தப்படாதவிடத்து, கடைசி நாளன்று முடிவடையும் அடுத்துவரும் ஒவ்வொரு மாதத்தினதும் அல்லது எக்காலப்பகுதியின் பாகத்தின்போது அது தவணை தவறியதாயுள்ளதோ அத்தகைய காலப்பகுதியின் பாகம் தொடர்பிலும் தவணை தவறிய தொகையின் இரண்டு சதவீதத்துக்குச் சமமான மேலும் ஒரு தொகையையும்

செலுத்துதல் வேண்டும்.

ஆயின்எவ்வாறுயினும் இவ்வுட்பிரிவின் கீழ் தண்டமாகச் செலுத்தப்படற்பாலதான முழுத்தொகையானது, எச்சந்தர்ப்பத்திலும் தவணை தவறிய தீர்வையின் ஐம்பது சதவீதத்தை விஞ்சுதலாகாது; அத்துடன் அத்தகைய தவணை தவறுகை சம்பவித்த எவையேனும் சிறப்புச் சூழ்நிலைகள் காரணமாக அத்தகைய பணத்தொகையை விட்டுவிடுதல் அல்லது குறைப்புச் செய்தல் நீதியானதும் ஒப்புரவானதுமென பணிப்பாளர் தலைமையதிபதி திருப்திப்பட்டால் ஏதேனும் அத்தகைய பணத்தொகை விட்டுவிடப்படலாம் அல்லது குறைக்கப்படலாம்.

(2) பத்தாம் பிரிவின் கீழ் மேன்முறையீடொன்று இறுதியாகத் தீர்மானிக்கப்பட்டதன்மேல், எந்தத் தவணை தவறியுள்ள தீர்வையுடன் மேலதிகமாக, (1) ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் பணத்தொகை அல்லது பணத்தொகைகள் சேர்க்கப்பட்டுள்ளதோ அல்லது சேர்க்கப்பட்டுள்ளனவோ, அத்தீர்வையானது குறைக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய பணத்தொகை அல்லது பணத்தொகைகள், அதன்பின்னர், அவ்வாறு குறைக்கப்பட்ட தீர்வைமீது கணிக்கப்படுதல் வேண்டும்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 13அ எனும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 13அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர்களால் கழிப்பனவு செய்யப்படுதல்.

13அ. இச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டவரான உற்பத்தியாளர் ஒருவர், இச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வேறொரு உற்பத்தியாளருக்கு, ஏதேனும் காலாண்டின்போது, உற்பத்தித் தீர்வைக்கு ஆட்படும் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலில் முதலில் குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளரால் பயன்படுத்தப்பட்ட உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலனவான பொருட்கள் மீது உற்பத்தித் தீர்வையை மொத்த விற்பனை வரவு வரியை அல்லது உற்பத்தித் தீர்வையையும் மொத்த விற்பனை வரியையும் உள்ளடக்குகின்ற ஏதேனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஏதேனும் பணத்தொகையைக் கொடுத்துள்ளவிடத்து, அவ்வாறு உள்ளடக்கப்பட்ட உற்பத்தித் தீர்வையும், மொத்த விற்பனை வரியும், அக்காலாண்டுக்கென முதலில் குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளரால் கொடுபடற்பாலதான உற்பத்தித் தீர்வையிலிருந்து கழிக்கப்படல் வேண்டும்;

ஆயின், பின்வரும் விடயங்களில் உற்பத்தித் தீர்வைக்கான கழிப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது :—

(அ) ஏதேனும் பொறித்தொகுதி, இயந்திரசாதனம், பொருத்திகள், கட்டடங்கள், வாகனங்கள் அல்லது அத்தொழிலில் பயன்படுத்தப்பட்ட வேறு மூலதனச் சொத்துக்கள் தொடர்பில்;

(ஆ) 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் அல்லது வேறேதேனும் சட்டத்தின்கீழ் ஒரே உள்ளீடுகள்தொடர்பில் கழிப்பனவுகள் அனுமதிக்கப்படுமிடத்து ;

(இ) அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருளானது எந்த முதல் குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதோ அந்த முதல் குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளரிடமிருந்து மற்றைய உற்பத்தியாளர் பின்வருவனவற்றை எடுத்துக்

காட்டும் பணம் கொடுக்கும் சீட்டொன்றைப் பெற்றிருந்தாலொழிய :—

(i) அவரது பெயர் அஞ்சல் முகவரி அத்துடன் அவரது பதிவு செய்யப்பட்ட இலக்கம் ;

(ii) வாங்குபவரின் பெயர், அஞ்சல் முகவரி அத்துடன் பதிவு செய்யப்பட்ட இலக்கம் ஏதேனும் இருப்பின் அது ;

(iii) ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் செய்து கொள்ளப்பட்ட தேதி ;

(iv) கொடுக்கல் வாங்கலின் தன்மை ;

(v) வழங்கப்பட்ட உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலனவான பொருட்களின் அளவும் உற்பத்தித் தீர்வைக்கும் மொத்த விற்பனை வரவு வரிக்குமான ஏதேனும் இருப்பனவுக்கு முன்னர் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பிலும் பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான பணத்தொகையும்; அத்துடன்

(vi) அத்தகைய ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் சார்த்திக்கூறப்படற்பாலனவான உற்பத்தித் தீர்வையும், மொத்த விற்பனை வரவு வரியும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) பந்தி (இ) யை உடனடுத்து "இச்சட்டத்தின் நோக்கத்திற்காக அத்தகைய ஆள் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் பதிவுசெய்யப்பட்டிருந்தாலொழிய ஈடுபடுதலாகாது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்தின் நோக்கத்துக்காக அத்தகைய ஆள் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் பதிவுசெய்யப்பட்டிருந்தாலொழிய ஈடுபடுதலாகாது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் (ஆ) எனும் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

"(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வோர் ஆளுக்கும் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான பதிவுச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒவ்வோர் ஆளுக்கும் பதிவு இலக்கமொன்றைக் குறித்து ஒதுக்குதலும் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை நீக்கஞ்செய்தல்.**

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்படுகிறது.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (3) ஆம் (4) ஆம் உட்பிரிவுகளை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :—

" (3) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனும் ஆள் தொடர்பில் பணிப்பாளர் தலைமையதிபதியால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால் இடருற்ற அவ்வாள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அத்தகைய கட்டளை அவருக்குத் தெரிவிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் 10 நாட்கள் முடிவடைய முன்னராக (6) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மேன்முறையீட்டுச் சபைக்கு எழுத்திலான மேன்முறையீடொன்றை முன்வைக்கலாம். அத்துடன் சபைக்கு முன்வைக்கப்பட்ட அத்தகைய மேன்முறையீட்டின்மீது மேன்முறையீட்டுச் சபையானது, கட்டளைக்கெதிராக அம்மேன்முறையீடு முன்வைக்கப்பட்டதோ அக்கட்டளையை உறுதிப்படுத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது திருத்தலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்று அத்தகைய கட்டளை சம்பந்தப்பட்ட ஆளுக்குப் பணிப்பாளர் தலைமையதிபதியால் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்தின் பின்னர், (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள்ளாக அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருந்தாலொழிய வலுவுக்கு வருதல் வேண்டும்."

(2) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும் :—

" (6) இப்பிரிவின் நோக்கத்துக்காக மேன்முறையீட்டுச் சபையொன்று இருத்தல் வேண்டும். அது திறைசேரியின் பிரதிச் செயலாளரையும், அமைச்சரினால் நியமிக்கப்பட்ட நிதி அமைச்சின் இரண்டு சிரேட்ட அலுவலர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.".

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

" கட்டடங்களை அல்லது இடங்களை சோதனை செய்வதற்கும் தேடுகை செய்வதற்குமான தத்துவங்கள்.

19. (1) பணிப்பாளர் தலைமையதிபதியினால் எழுத்தில், அதன் சார்பில் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உற்பத்தி தீர்வை அலுவலர், சமாதான அலுவலர் ஒருவருடன் சேர்ந்து பின்வரும் செயல்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் செய்யலாம் :—

(அ) இச்சட்டத்தின்கீழான எவையேனும் நடவடிக்கைகளுக்குப் பயன்படும் என அல்லது இயைபானதென அவர் அபிப்பிராயப்படும் எவையேனும் கணக்குப் புத்தகங்கள் இடாப்புகள் பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்கள் காணப்படக் கூடுமென அவர் நம்புவதற்குக் காரணமுள்ள ஏதேனும் கட்டடத்தில் அல்லது இடத்தில் நுழைந்து அதனைத் தேடுகையிட்டு அவை காணப்படுமாயின் சோதனை செய்யலாம்;

(ஆ) எவையேனும் அத்தகைய கணக்குப் புத்தகங்களை, இடாப்புகளை, பதிவேடுகளை அல்லது வேறு ஆவணங்களைக் கைப்பற்றலாம் அல்லது அவற்றின் மீது அடையாளக் குறிகளை வைக்கலாம் அல்லது அவற்றிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகளை எடுக்கலாம் அல்லது அவற்றின் பிரதிகளை எடுக்கலாம்;

(இ) இச்சட்டத்தின் கீழான எவையேனும் நடவடிக்கைகளுக்கு பயன்படுமென அல்லது இயைபானதென அவர் அபிப்பிராயப்படும், இப்பிரிவின்கீழான ஏதேனும் தேடுகையின் போது காணப்படும் வேறு எவையேனும் பொருட்களை குறித்துக் கொள்ளலாம் அல்லது அவற்றின் பொருட்பதிவேடு ஒன்றைச் செய்யலாம்.

தேடுகைகள் தொடர்பாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் இயலக்கூடிய அளவுக்கு இப்பிரிவின் கீழான தேடுகைகளுக்கு ஏற்புடையனதாதல் வேண்டும். இந்த உட்பிரிவில் "சமாதான அலுவலர் என்பது 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் உள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனும் உற்பத்தித் தீர்வை அலுவலர் தமது தத்துவங்களைப் பிரயோகிக்க அதிகாரமளிக்கப்பட முன்னர், பணிப்பாளர் தலைமையதிபதி அவ்வலுவலரால் அத்தத்துவங்கள் பிரயோகிக்கப்படுவதை அவசியமாக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் பற்றிப் பதிதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமை யதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உற்பத்தித் தீர்வை அலுவலர், எவரேனும் ஆளிடமிருந்து ஏதேனும் கணக்குப் புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கைப்பற்றுகின்றவிடத்து அத்தகைய உற்பத்தி தீர்வை அலுவலர் அப்புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைத் தாம் கைப்பற்றியுள்ளதாகக் குறித்துரைக்கும் நினைவிதழ் ஒன்றை அவ்வாளுக்கு வழங்குதல் வேண்டும்.

(4) எவரேனும் உற்பத்தித் தீர்வை அலுவலரால் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கைப்பற்றப்பட்ட ஏதேனும் கணக்குப் புத்தகம், இடாப்பு, பதிவேடு, அல்லது வேறு ஆவணம் அத்தகைய புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தை நுனித்தாயாய்வதற்கு அல்லது எந்த ஆளுக்கு அத்தகைய புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணம் சொந்தமாக இருந்ததோ அந்த ஆளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் தொடுப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான காலம்வரை அத்தகைய உற்பத்தித் தீர்வை அலுவலரின் உடைமையில் வைத்திருக்கப்படலாம்.".

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) இப்பிரிவில்—

(i) "சாரதி" என்பது ஒரு மோட்டார் சைக்கிள் அல்லது துவிச்சக்கர வண்டி ஓட்டுபவரையும் அத்துடன் கப்பல் அல்லது வானூர்தி ஒன்றின் தளபதியையும் உள்ளடக்கும் ;

(ii) "வாகனம்" என்பது ஏதேனும் கோச்சுவண்டியை, ஊர்தியை, மோட்டார் ஊர்தியை, மோட்டார் சைக்கிளை, வசு வண்டியை, இழுவை வண்டியை, லொறியை, துவிச்சக்கர வண்டியை, அல்லது பொறிமுறையாக இயக்கப்படும் வேறு வாகனத்தை உள்ளடக்கும் ; அத்துடன்

(iii) 'கலம்" என்பது வானூர்தியொன்றையும் உள்ளடக்கும்.".

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1) பிரிவு 4 அல்லது பிரிவு 5 அல்லது பிரிவு 14 என்பதன் ஏற்பாடுகளை மீறுகின்றவரான எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்க முறையிலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்து இலட்சம் ரூபாவை

விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஐந்து ஆண்டு களுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொரு வகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"தவறுகளை இணக்குதல்.

27. பணிப்பாளர் தலைமையதிபதி 4 ஆம் 5 ஆம் அத்துடன் 14 ஆம் பிரிவுகளின் கீழான எவையேனும் தவறுகளை இணக்கலாமென்பதுடன் தீர்ப்புக்கு முன்னர் அதன் கீழான ஏதேனும் வழக்கு நடவடிக்கையை நிறுத்திவைக்கலாம் அல்லது இணக்கலாம். பணிப்பாளர் தலைமையதிபதி ஏதேனும் தவறை இணக்குவதன் பாகமாக, படகு கலம், வாகனம், அல்லது பொருளின் மதிப்பீட்டுப் பெறுமதியின் கூட்டு மொத்தத்தினை விஞ்சாத பணத்தொகையைச் செலுத்துவதன் மேல் 20 ஆம் பிரிவின்கீழ் கைப்பற்றப்பட்ட ஏதேனும் படகை, கலனை, வாகனத்தை அல்லது பொருளை விடுவிக்குமாறு கட்டளையிடலாம். தவறொன்றை இணக்குவதற்கென் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் 28 ஆம் பிரிவில் காட்டப்பட்டமுறையில் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

23. பின்வரும் புதிய பிரிவானது 28 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது முதன்மைச்சட்டவாக்கத்தின் 28அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"சிறப்புச் சேவைகளுக்கும் சமுகமளித்ததற்குமாக உற்பத்தித் தீர்வை அலுவலர்களுக்குக் கொடுப்பனவு செய்தல்.

28அ. எவரேனும் ஆள்—

(அ) சிறப்புச் சேவை ஒன்றென அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் சேவையை; அல்லது

(ஆ) அவரது முறையான அலுவலகம் அல்லது தொழிலிடம் தவிர்ந்த ஏதேனும் அலுவலகத்தில் தீர்வை அலுவலர் சமுகமளிப்பதைத் தேவைப்படுத்துகின்றவிடத்து

பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் அத்தகைய ஆளினால் விடயத்திற்கேற்றவாறுபோல அத்தகைய சேவைக்காக அல்லது சமுகமளித்ததற்காக பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படுதல் வேண்டும்.".

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) "ஏற்றுமதி" என்பதன் வரைவிலக்கணத்துக்கு முன்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :—

' "முகவர்" என்பது வேறெவரேனும் ஆளின் சார்பில் ஏதேனும் தொழிலின் பணிப்பை, கட்டுப்பாட்டை அல்லது முகாமையைக் கொண்டுள்ள எவரேனும் ஆளையும் உள்ளடக்கும்;

"உற்பத்தித் தீர்வை அலுவலர்" என்பது இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டு தத்துவமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் என்று பொருளாகும்;";

(2) "தயாரிப்பு" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின் வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"தயாரிப்பாளர் அல்லது உற்பத்தியாளர்"; என்பது,

(அ) பொருள் ஒன்றை ஆக்குகின்ற;

(ஆ) ஏதேனும் பொருளை விற்பனைக்கென இசைவாக்குகின்ற;

(இ) பண்டங்களை பதனிடுகின்ற அல்லது பொருத்தியளக்கின்ற, எவரேனும் ஆள் என்று பொருளாகும்.".

(3) ' "விதித்துரைக்கப்பட்ட" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்—

"காலாண்டு" என்பது ஒவ்வோர் ஆண்டிலும் சபையின் முதலாம் நாளன்று தொடங்கும் மூன்று மாதங்கள்கொண்ட ஒரு காலப்பகுதி என்று பொருளாகும்." '.

25. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.